செ.வெ.எண்: 58/2018 நாள்: 2-2-2018

பத்திரிக்கை செய்தி

விவசாயிகளுக்கு உரங்கள் உரிய நேரத்தில் உரிய அளவு, சரியான விலையில், தரமான உரங்களை கிடைகின்றனவா என்பதையும் உரக்கட்டுபாடு ஆணை 1985 படி உள்ளனவா என காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர் வட்டாரத்திலுள்ள உரவிற்பனை நிலையங்களை திரு.பி.ஜே.குணசேகர், வேளாணமை இணை இயக்குநர் காஞ்சிபுரம் அவர்கள் 1.2.18 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது திரு.கோ.சோமு வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) மற்றும் திரு.லெனின் வேளாண்மை அலுவலர்(உத்திரமேரூர்) ஆகியோர்கள் உடன் இருந்தார்கள்.

ஆய்வில் உரவிற்பனை உரிமம், விவசாயிகளுக்கு விற்பனையின் போது POS Machine மூலம் ரசீது வழங்குதல், உரங்களை உரியமுறையில் இருப்பு வைத்தல், சரியான விலைக்கு விற்பனை செய்தல், தகவல் பலகை பார்வையில் படும்படி வைத்தல், கணக்குகள் சரியாக பராமரித்தல் போன்ற உரக்கட்டுபாடு ஆணை 1985 படி உள்ளதா என ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் உத்திரமேரூர் வட்டாரத்தில் 6 உரவிற்பனை நிலையங்களை பார்வை செய்ததில் POS Machine மூலம் ரசீது வழங்காமல் உள்ளது, உரங்களை உரியமுறையில் இருப்பு வைக்காதது, உரவிற்பனை நிலையத்தில் உர விலை மற்றும் இருப்பு விவரம் குறித்த தகவல் பலகை வைக்காமல் இருந்ததை கண்டறியப்பட்டது. உரக்கட்டுபாடு ஆணை1985 விதிகள் மீறிய கடை உரிமையாளர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

இருப்பு வைத்துக்கொண்டு உரங்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யாமல் இருப்பது, அதிகவிலைக்கு விற்பனை செய்வது, தேவையற்ற பொருட்கள் கட்டாயபடுத்தி விற்பனை செய்வது, விற்பனையின் போது POS Machine மூலம் ரசீது வழங்காதது, கணக்குகள் சரியாக பராமரிக்காதது இது போன்ற உரக்கட்டுபாடு ஆணை 1985 விதிகளை கடைபிடிக்காத உர விற்பனை நிலைய உரிமையாளர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வோளாண்மை இணை இயக்குநர் அவர்கள் தெரிவித்துக்கொண்டுள்ளார் மேலும் போதிய அளவு யுரியா உரம் தட்டுபாடு இல்லாமல் தொடர்து சப்ளை செய்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தங்கு தடையின்றி பேதிய அளவு இருப்பு உள்ளது. ஏதேனும் விவசாயிகள் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் பில் இல்லாமல் விற்னை செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, காலாவதியான பொருட்கள் விற்பணை செய்வது, இருப்பு வைத்துக்கொண்டே இருப்பு இல்லை என தெரிவிப்பது போன்றவைகள் குறித்து சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், வட்டார வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) காஞ்சிபுரம் (செல் 9443104780) புகார் தெரிவிக்களாம் என வேளாணமை இணை இயக்குநர் காஞ்சிபுரம் அவர்கள் தெரிவிக்கின்றார்.

(ஒம்).பி.ஜெ.குணசேகர்
வேளாண்மை இணை இயக்குநர்
காஞ்சிபுரம்

-உத்திரவுப்படி-

வேளாண்மை உதவி இயக்குநர்(தக). 2/2/18